பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.148 நாள் : 09.11.2016

## பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நோய்த்தடுப்பு மற்றும் தூய்மையான சென்னை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

---

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக சென்னை முழுவதும் நோய்த்தடுப்பு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்கள், அவற்றை தடுக்கும் முறைகள், தூய்மையாக சென்னையை பராமரித்தல் போன்றவை சம்பந்தமாக விழிப்புணர்வு முகாம்கள் பள்ளி, கல்லூரிகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக, இன்று (09.11.2016) மண்டலம்–1 முதல் 15 வரை உள்ள அனைத்து 200 கோட்டங்களிலும், கோட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் மொத்தம் 200 பள்ளிகளில் உள்ள 1 இலட்சம் மாணவ, மாணவியர்களால் தூய்மை இந்தியா உறுதிமொழி மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

அதனையொட்டி, மண்டலம்–7, முகப்பேர் கிழக்கில் உள்ள எம்.ஜி.ஆர். ஆதர்ஷ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 1500 மாணவ, மாணவியர்களை ஒருங்கிணைத்து, டாசிலிங் பவுண்டேஷன் என்ற அரசு சாரா அமைப்பின் ஒத்துழைப்புடன் ‘‘தூய்மையான சென்னை’’ என்ற எழுத்து வடிவில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டு, அனைத்து மாணவ, மாணவியர்களால் தூய்மை இந்தியா மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழிகளும் எடுக்கப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மற்ற பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு தொடர்ந்து நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர், சுகாதார கல்வி அலுவலர், செயற்பொறியாளர், துப்புரவு அலுவலர், சுகாதார ஆய்வாளர் மற்றும் பள்ளியின் முதல்வர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**